# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 59 / 2016</u>**

திரு. R. ரகுபதி,
உரிமையாளர்,
சிவபாலா கன்ஸ்டிரக்ஸன்,
13A/9, முதல் தெரு,
எம்.எப். ரோடு,
இராணிப்பேட்டை 632 401. .. . மேல் முறையீட்டாளர்
(திரு. சிவக்குமார்)

எதிர்

1) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர், வேலூர் – 6.

2) செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை–632 401.

3) உதவி செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை–632 401.

4) உதவி பொறியாளர்/நகரம்–1/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை–632 401. . . . . . .. . . .எதிர்மனுதாரர்கள்
(திரு. உதயன், செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை,
திரு.D. அசோகன், உதவி செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை
& திரு. தனசேகரன், இளம்பொறியாளர்/நகரம்/இராணிப்பேட்டை)

**<u>கேட்புரை நாள்: 21–10–2016</u>**

**<u>ஆணை நாள் : 9–12–2016</u>**

திரு. R. ரகுபதி, உரிமையாளர், சிவபாலா கன்ஸ்ட்ரக்ஷன், இராணிப்பேட்டை அவர்களின் 2.8.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 59/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.10.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாட்களில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மேல்முறையீட்டாளரின் மனுவை ஏற்று சட்டபூர்வமான உரிமையாளரான அவரது பெயரில் மேற்படி சிவபால அப்பார்ட்மென்ட்டில் உள்ள A1, C4 குடியிருப்புகளுக்கு அவரது பெயரில் மின்இணைப்பு வழங்க உத்தரவு இடவேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 திரு. மூர்த்தி என்ற பெயரில் மின்இணைப்பு எண்.236–003–2461–c மற்றும் 236–003–2460–c ஆகியவை ராணிப்பேட்டை எம்.எப். ரோடுவிலுள்ள அப்பார்ட்மெண்ட்டில் உள்ள A1, மற்றும் C4 ஆகிய குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.2 மேற்கண்ட மின்இணைப்புகள் வழங்கியதை ஆட்சேபித்து அவரின் பெயரில் மின்இணைப்பு வழங்க கோரியும் உரிமம்தாரர்களின் மேலதிகாரிகளுக்கு மனு செய்யப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் இல்லாததால் வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 26.5.2016ல் மேற்கண்ட மின்இணைப்புகளை நிரந்தர துண்டிப்பு செய்து மேல்முறையீட்டாளரின் பெயரில் மின்இணைப்பு வழங்க மனு செய்துள்ளார்.

2.3 மன்றம் அவரது மனுவை விசாரணை நடத்தாமல் தள்ளுபடி செய்துள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>தாமதத்திற்கு மன்னிப்பு</u>

3.1 மன்றம் தன்னுடைய ஆணையை 6.6.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. மன்ற விதிகளின்படி மேல்முறையீட்டு மனு மன்றத்தின் ஆணை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால், இந்த மேல்முறையீடு தாமதமாக 4.8.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2 தலைவர், வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், அவர்களுக்கு புகார் மனு அனுப்பப்பட்டு மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க தலைவர், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு ஆணையம் உத்தரவு இட்டுள்ளது. அதன்படி, தலைவர், வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்ப்பார்த்து இருந்ததால் காலதாமதம் ஏற்பட்டது. அவரால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத பட்சத்தில் இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படுகிறது. எனவே, காலதாமதத்தை தள்ளுபடி செய்து மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக் உரிய நீதி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3.3 இது சம்பந்தமாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதித்தொகுப்பின் விதி 8 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து ஆணையம் நிர்ணயித்த படிவத்தில் குறிப்பிட்ட விதத்தில் மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.*

*இருந்தபோதிலும், மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என மின்சார குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட முப்பது நாட்களுக்குப் பிறகும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம். மன்றத்தின் ஆணைப்படி பணம் செலுத்த கோரப்பட்ட எந்த மேல்*

*முறையீட்டாளரும், மன்றம் ஆணையிட்ட தொகையில் இருபத்தைந்து சதவீத தொகையை குறிப்பிட்ட விதத்தில் முன் பணமாக செலுத்தினாலொழிய, மின் முறையீட்டாளர் எந்த மேல் முறையீட்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.''*

**3.4** மேற்கண்ட விதியின்படி, மன்றத்தின் ஆணை நாளிலிருந்து **30** நாட்களுக்கு பிறகு தாமதமாக தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள் அவ்வாறு தாமதமாக தாக்கல் செய்வதற்கு போதுமான காரணம் இருந்தது என்று மின்குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் அம்மேல்முறையீடுகளை ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது. எனவே, பத்தி **3.2**ல் தாமதமாக முறையீட்டை தாக்கல் செய்வதற்கு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ள காரணங்களால் தாமதம் மன்னிக்கப்பட்டு மேல்முறையீடு பதிவு செய்யப்படுகிறது.

**3.** <u>**மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :–**</u>

**4.1** தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிமுறைகளை புறக்கணித்து தகுதியுள்ள மனுதாருக்கு மின்இணைப்பு வழங்காமல் கட்டிடத்தின் உரிமையாளரும் அல்லாத அல்லது அந்த குடியிருப்பில் குடியில்லாத நபருக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளதை நிரந்தர மின்இணைப்பு துண்டிப்பு செய்யவும் தகுதியுள்ள மனுதாரரின் பெயரில் அவருக்கு உரிமையான குடியிருப்புகளுக்கு மின்இணைப்பு வழங்க உரிய உத்தரவு வழங்க கோரி இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

**4.2** இராணிப்பேட்டை நகர் பிரிவு–**1** உட்பட்ட பகுதியில் எம்.எப். ரோடு சிவபாலா அப்பார்ட்டிமென்டில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட அனுமதி, வரைப்பட அனுமதி மனுதாரர் பெயரில் முறையாக அனுமதி பெறப்பட்டு மேற்படி குடியிருப்புகளில் **12** குடியிருப்புகளுக்கு மின்இணைப்பு மனுதாரர் பெயரில் அளிக்க விண்ணப்பித்த போது எதிர்மனுதாரர்–**3** அவர்கள் விதிமுறை TNERC Distribution Code Regulations section **27(4)** அமென்ட்மென்ட் எண்.tnerc/dc/8-21 dt.**7.10.2014**, gazette Notification dt.**3.12.2014**க்கு எதிராக மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்க மறுத்து விட்டார். மறுத்துவிட்டு குடியிருப்பு வாங்கியவர் பெயரில் நகராட்சி வீட்டு வரி விதிப்பு செய்யப்பட்ட பின்பு அவர்கள் பெயரில் மின்இணைப்பு

கோரி விண்ணப்பிக்குமாறு வாய் மூலம் கூறினார். அதன்படி மேற்படி குடியிருப்பு வாங்கியவர்கள் வீடு முழுமையாக பூர்த்தி செய்து முறையாக நகராட்சி வரிவிதிப்பு பெறப்பட்ட பின் விண்ணப்பித்து 10 மின் இணைப்பு A2, A3,A4, B1, B2, B3, B4, C1, C2 மற்றும் C3 முறையே வழங்கப்பட்டது.

| வ.எண். | பிளாட் உரிமையாளர் பெயர் | பிளாட் எண். | மின்இணைப்பு எண். |
|---|---|---|---|
| 1. | J. சமியுல்லாஷரீப் | A2 | 2268–C |
| 2. | P. கொண்டப்பன் | A3 | 2267–C |
| 3. | வாகீசன் | A4 | 2328–C |
| 4. | R. சுமதி | B1 | 2297–C |
| 5. | P. அன்பழகன் | B2 | 2297–C |
| 6. | R. ரவிக்குமார் | B3 | 2269–C |
| 7. | மாதவன் | B4 | 2296–C |
| 8. | சிதம்பரம் | C1 | 2270–C |
| 9. | சந்திரஹாசன் | C2 | 2294–C |
| 10. | R. மாணவாளன் | C3 | 2298–C |

4.3 மீதி இரண்டு குடியிருப்புகளுக்கு A1,C4 ஆகியவை மனுதாரரால் விற்பனை செய்யப்பட வில்லை. மேற்படி பிளாட்டுக்கான பிரிக்கப்படாத அடிமனை (UDS) யார் பெயரிலும் பதிவு செய்யப்படவில்லை. மனுதாரரால் கட்டிடத்தை கட்டி முடித்து யாருக்கும் ஒப்படைக்கப் படவில்லை. தற்சமயம் மேற்படி இரண்டு குடியிருப்புகளுக்கும் மனுதாரரே உரிமையாளர். மேலும், மேற்படி பிளாட்டுகள் முழுமையாக கட்டி முடிக்காமல் காலியாக உள்ளது.

4.4 tnerc Distribution Code Regulation 27(4)š intending consumer who is not the premises . . . shall produce proof of his/her being in lawful occupation . . . இதற்கு விளக்கம் அமென்ட்மென்ட் எண்.TNERC/DC/8–21 dt.7.10.2014 கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

27(4) Explanation for purpose of this sub regulation the expression “valid proof“ means proof of occupancy such as registered power of attorney or latest rent receipt issued prior to thie date of application or lease deed or possession order from appropriate authority or decree or judgement of Courts.

TNERC Requistions 27(8)

மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி கட்டி முடிக்கப்படாத குடியிருப்புகளுக்கு மின்இணைப்பு யார் பெயரிலும் வழங்க முடியாது. விதிமுறை 27(8)ன் படி several flats appartment local body DTCP approval கட்டிடம் கட்ட அவரது பெயரில் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மேலும், அந்தகட்டிடம் முழுவதும் மனுதாரர் சொந்த செலவில் கட்டப்பட்டது. விற்பனை செய்யப்படாத குடியிருப்புகள் மனுதாரருக்கே சொந்தமானது ஆகும்.

4.5 விதிமுறை 27(4)ன் படி ரிஜிஸ்டர் பவர் ஆப் அட்டர்னி மனுதாரருக்கு மட்டுமே உள்ளது. பில்டிங் கட்டுவதற்கான possession order from appropriate authority மனுதாரருக்கு மட்டுமே உள்ளது.

4.6 கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் அனுமதியின் பெயரில் மின்இணைப்பு வழங்குவதற்கு TNERC தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிமுறைகளில் இடம் இல்லை.

4.7 மேற்கண்ட விதிமுறைகளுக்கு எதிராக கட்டி முடிக்காத மேற்படி குடியிருப்புகள் A1,C4 ஆகிய குடியிருப்புகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாத மேற்படி குடியிருப்பில் குடியில்லாத (not occupied) திரு. T. மூர்த்தி என்ற நபருக்கு விற்பனை செய்யப்படவில்லை. கட்டிடம் மனுதாரால் அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அவர் மேற்படி வீட்டில் குடியிருக்கவில்லை. (if occupied the premises then only whether the premises has been occupied legally or not In this case this question does not arise Therefore, he is not occupying the premises and he is not the owner of the building). மனுதாரர் ஆட்சேபத்தை புறக்கணித்து விட்டு திரு. T. மூர்த்தி என்ற நபர் பெயரில் மின்இணைப்பு எண்.1–236–003–2461–c எண்.2–236–003–2460–c வழங்கப்பட்டு உள்ளது.

4.8 எதிர்மனுதாரர்–3 அவர்களின் செயல்களை எதிர்த்து முறையான மேல்முறையீடுகள் எதிர்மனுதாரர்–2 மற்றும் எதிர்மனுதாரர்.1 அவர்களிடத்தில் முறையீடு செய்தும் உரிய நடவடிக்கை இல்லாததால் மேற்பார்வை பொறியாளர், வேலூர் மின்பகிர்மான வட்டம் அவர்களிடம் முறையீடு செய்யப்பட்டது. யாரும் உரிய நடவடிக்கை எடுக்காததால் TNEB vigilance DGP க்கு புகார் அளிக்கப்பட்டது. மனுதாரர் புகார் தொடர்பாக vigilance பிரிவினர் விரிவான விசாரணையும், கள ஆய்வும் செய்தனர். முறைகேடாக மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. என்று உறுதிப்படுத்தியவர்கள் மனுதாரரின் புகார் (மின்இணைப்பு நிரந்தர துண்டிப்புசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை) பரிசீலனை செய்யவேண்டும் என்றும் தவறு செய்த அதிகாரி ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மேற்பார்வை பொறியாளர், வேலூர் அவர்களுக்கு DGP அவர்கள் கடிதம் எழுதியுள்ளதாக தெரியவருகிறது.

4.9 Vigilance ரிப்போர்ட் பெறப்பட்டு நீண்ட காலமாக தவறு செய்தவர்களை காப்பாற்ற வேண்டும் எந்த அடிப்படையில் vigilance ரிப்போர்ட் தொடர்பாக மனுதாரர் கடிதங்கள்தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் காலம் கடத்தப்பட்டு 5 பேர் மீது பொறுப்பு சுமத்தப்பட்டது. அதில் உதவி செயற்பொறியாளர் திரு.அரிபாபு அவர்களுக்கு தண்டனையும் அளிக்கப்பட்டு விட்டது. இதிலிருந்து மின்இணைப்பு மனுதாரர் பெயரில் அளிக்காமல் விதிமுறைக்கு புறம்பாக தொடர்பில்லாத நபருக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட பின்பும் மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4.10 சட்டவிரோதமான விதிமுறைக்கு புறம்பாக அளிக்கப்பட்ட மின்இணைப்பு எண்.1–236–003–2461–c, எண்.2 236–003–2460–c நிரந்தர துண்டிப்பு செய்து சட்டப்பூர்வ தகுதியுள்ள மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறு நுகர்வோர் குறைதீர்க்கும் தீர்ப்பாயம்(CGRF) முன்பு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிமன்ற வழக்கு நிலவையில்

உள்ளதால் FORUM விசாரிக்க இயலாது என்று மனுதாரருடைய மனு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

4.11 CGRFவிற்கு 26.5.2016 அன்று அனுப்பப்ட்டு CGRF ஆல் 27.5.2016 அன்று பெறப்பட்டது. 5 பணி நாட்களுக்குள் ஒப்புகை மனுதாரருக்கு சார்பு செய்யப்படவேண்டும். ஆனால், 6.6.2016 நாளிட்டு 7.6.2016 அன்றுதான் சார்பு செய்யப்பட்டது. CGRF சேர்பெர்சன் தானே சுயேட்சையாக ஒருதலைபட்சமாக FORUMத்தை கூட்டாமல் ஒப்புகையிலேயே தனது முடிவை அறிவித்துள்ளார். அவரது பெயரில் மின்இணைப்பு அளிக்க கோரியுள்ளது தொடர்பாக மனு செய்யப்பட்டுள்ளது. சேர்பெர்சன் குறிப்பிடுவது போன்ற OS 54/2015 வழக்கு அவருக்கு எதிரானது அல்ல. அந்த வழக்கில் அவர் பிரதிவாதி அல்ல. அவரது பெயரில் அவருக்கு உரிமையுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்கக்கூடாது என்று எந்த வழக்கும் இல்லை.

4.12 Chairperson / VEDC / Vellore அவர்கள் குறிப்பிடுவதைப்போல் வழக்கு எண். OS 54/2015 வழக்கில் எந்த தடை உத்தரவும் இல்லை. மேலும், அந்த வழக்கு நிலுவையில் இல்லை. வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது. நிலுவையில் உள்ளது என்று கூறுவது தவறாகும். தீர்ப்பில் மின்இணைப்பை துண்டிக்க கூடாது என்றோ, மனுதாரர் பெயரில் மின்இணைப்பு அளிக்க கூடாது என்றோ மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிமுறைகளை கடைப்பிடிக்க கூடாது என்றோ குறிப்பிடப்படவில்லை.

4.13 மேலும், மேற்படி வழக்கில் மனுதாரரான திரு. மூர்த்தி அவர்களுக்கு மேற்படி குடியிருப்பில் தொல்லை கொடுக்க கூடாது என்றுதான் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மின்இணைப்பு அளிக்கப்பட்டுள்ள குடியிருப்பில் வழக்கின் மனுதாரரான திரு. மூர்த்தி என்பவர் குடியில்லை. நாளது வரை முடிக்கப்படாமல் குடியிருப்பு காலியாகவே உள்ளது.

## 5. எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-

5.1 இராணிப்பேட்டை நகர் பிரிவு–1 உட்பட்ட எம்.எப். ரோடு சிவபாலா அப்பார்ட்டிமென்டில் அடுக்குமாடி குடியிருப்பில் A2, A3, A4, B1, B2, β3, B4, C1, C2 மற்றும் C3 முறையே வழங்கப்பட்டது.

| வ.எண் | பிளாட் உரிமையாளர் பெயர் | பிளாட் எண். | மின்இணைப்பு எண். | தேதி |
|---|---|---|---|---|
| 1. | J. சமியுல்லாஷரீப் | A2 | 08–236–003–2268 | 12.3.2014 |
| 2. | P. கொண்டப்பன் | A3 | 08–236–003–2267 | 12.3.2014 |
| 3. | மைதிலி | A4 | 08–236–003–2328 | 7.8.2014 |
| 4. | R. சுமதி | B1 | 08–236–003–2297 | 29.5.2014 |
| 5. | P. அன்பழகன், சூ, காயத்திரிதேவி | B2 | 08–236–003–2295 | 29.5.2014 |
| 6. | S. ரவிக்குமார் | B3 | 08–236–003–2269 | 12.3.2014 |
| 7. | M. மாதவன் | B4 | 08–236–003–2296 | 29.5.2014 |
| 8. | S. சிதம்பரம் | C1 | 08–236–003–2270 | 12.3.2014 |
| 9. | K. சந்திரஹாசன் | C2 | 08–236–003–2294 | 29.5.2014 |
| 10. | R. மாணவாளன் | C3 | 08–236–003–2298 | 29.5.2014 |

5.2 மேலும், சிவபாலா அபார்ட்மென்டடில் உள்ள A1 மற்றும் C4 ஆகிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு உரிமையாளரான திரு. டி. மூர்த்தி அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிமுறைகளின்படி அளித்த உரிமை ஆவணங்களின் படிதான், வீட்டு மின்இணைப்புகள் **08–236–003–2461** மற்றும் **08–236–003–2460** முறையே வழங்கப்பட்டன.

5.3 திரு. ஆர். ரகுபதி, அவர்களிடம் உரிய உரிமை சம்பந்தமான ஆவணங்கள் அளிக்கும்படி இளநிலை பொறியாளர், நகரம்–1 இராணிப்பேட்டை அவர்களால் கடிதம் மூலம் கோரப்பட்டது. மனுதாரர் திரு. ஆர். ரகுபதி உரிமை சம்பந்தமான ஆவணங்கள் ஏதும் அளிக்கப்படாததாலும் திரு. டி. மூர்த்தி அவர்கள் அளித்த உரிய ஆவணங்களின் அடிப்படையிலும் வழக்கறிஞரின் சட்ட கருத்துரு அடிப்படையிலும் பேரில் **25.5.2015** அன்றுபதிவு செய்து களஆய்வுமேற்கொண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதை உறுதிசெய்த

பின் மின்இணைப்புகள் 23–6–2015 அன்று வழங்கப்பட்டன என்று செயற்பொறியாளர்/இப/ இராணிப்பேட்டை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

5.4 பிளாட் எண்.A1 மற்றும் C4 ஆகிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டி முடிக்கப்பட்டு உரிமை சான்று மற்றும் உரிய ஆவணங்கள் அளித்ததின் பேரில் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழிகாட்டுதல்படிதான் மின்இணைப்புகள் வழங்கப்பட்டன என்றும் மேற்கண்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு உரிமை சான்று பெறப்பட்டதால் விதிமுறை 27(4)ன்படி பின்பற்றுவதற்கான கேள்வி எழவில்லை . விதிமுறை 27(8) 3.10.2007லிருந்து நீக்கப்பட்டுள்ளது.

5.5 வருவாய்துறை மூலம் வழங்கப்பட்ட உரிமைப் பத்திரங்களின் அடிப்படையில் மின்இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிமுறை திருத்தம் அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/மி.ப.வி/8–21/7.10.2014 நாளிட்டது) 3.12.2014 அன்றுமுதல் அமல் செய்யப்பட்ட விதிமுறையில் இடம் உள்ளது.

5.6 மனுவில் குறிப்பிட்டுள்ள சிவபாலா அபார்ட்மென்ட் A1 மற்றும் C4 ஆகிய பிளாட்டுகளுக்கு ஏற்கனவே மின்இணைப்புகள் திரு. டி. மூர்த்தி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மின்வாரியத்திற்கு எதிராக தொடர்ந்த அசல் வழக்கு எண்.54/2014க்கு 30.3.2016 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பாணையில் கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

*“பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ முகவர்களோ தாவா சொத்தில் வாதி அமைதியான சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருவதை எவ்விதத்திலும் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை மூலம் தடைச்செய்யப்படுகிறார்கள்”*

5.7 இந்த வழக்கில் செயற்பொறியாளர்/இப/இராணிபேட்டை மற்றும் இளநிலை பொறியாளர்/நகரம்1/இராணிப்பேட்டை அவர்கள் பிரதிவாதிகள். மேலும், இந்த வழக்கின் தாவா சொத்து பிளாட்டு எண்.A1 மற்றும் C4 மி.இ.எண்.236–003–2461 மற்றும் 236–003–2460 முதலியனவை ஆகும். எனவே, நீதி மன்ற தடையாணை உள்ளதால் மனுவின் கோரிக்கை

ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற விபரத்தினையும் இவ்வலுவலக க.எண்.348/மே.பொ/ மேம்/நாள்12.8.16–ன் மூலம் மனுதாரருக்கும் ஒழுங்குமுறை ஆணையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

5.7 இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு மின்இணைப்புகளில் (A1 மற்றும் C4 பிளாட்களில்) மின்சாரம் வழங்கப்பட்டதிலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்பட்டு மின்உபயோகம் செய்யப்பட்டு அதற்குண்டான மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.

6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு மேல்முறையீட்டாளரின் பதிலுரை</u>

6.1 மனுதாரர் 2.8.2016 நாளிட்ட அளித்த மனுவில் அனைத்து உறுதிமொழிக்கும் குற்றசாட்டிற்கு பதில் உரையை 10 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு மின்சார மின்குறைதீர்ப்பாளர் 10.8.2016 அன்று எதிர்மனுதாரருக்கு உத்திரவிட்டு உள்ளார். எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு அளித்த பதில் உரை ஒரு மாதம் கடந்து தாக்கல் செய்துள்ளார். கால தாமதத்தை தள்ளுபடி செய்யுமாறு அவர் கோரவில்லை. எனவே, அவரது பதில்உரை சட்ப்பூர்வமாக ஏற்கக்கூடியது அல்ல.

6.2 பிளாட் உரிமைதாரர்கள் உரிய ஆவணங்கள்படி விண்ணப்பம் செய்வதவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்து உள்ளார். இதில் எதிர்மனுதாரர் பிளாட்டினுடைய உரிமையாளர்கள் என்பதற்கான ஆவணங்கள் அளிக்கப்பட்டதாக ஏற்று கொண்டு உள்ளார். அந்த ஆவணங்கள் என்ன ? என்பதனை அவர் தெளிவுப்படுத்தவில்லை. பிளாட் உரிமைதாரர்கள் அளித்த ஆவணங்களாவது,

1. UDS பதிவு ஆவண நகல்

2. பிளாட் கட்டி முடித்தத பின்புதான் நகராட்சி வரிவிதிப்பு செய்யும் நகராட்சி வரிவிதிப்பு விதித்து வரி செலுத்திய ரசீது அளித்தார்கள்.

3. கட்டிடம் கட்டி ஒப்படைக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நகல்

6.3 மனுதாரர் உரிய உரிமை சம்மந்தமான ஆவணங்கள் அளிக்கப்படாததால் மனுதாரரின் பெயரில் இணைப்பு வழங்கப்படவில்லை என்பது தவறானது ஆகும். மேற்படி குடியிருப்பு கட்டுவதற்கு தற்காலிக மின்இணைப்பு மனுதாரர் பெயரில் ஆவணங்களை பரிசீலனை செய்துதான் அளித்தார்.

6.4 மேற்படி சிவபாலா அப்பார்மெண்ட்டில் உள்ள பொது மின்இணைப்பு எண்.08–236–003–2325 மனுதாரரின் பெயரில்தான் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான என்ன ஆவணங்கள் தேவைப்பட்டதோ அதே போன்ற ஆவணங்கள் பிளாட் A1 மற்றும் C4 ஆகிய குடியிருப்புகளுக்கு அவரது பெயரில் மின்இணைப்பு வழங்க போதுமானது ஆகும்.

6.5 திரு. மூர்த்திக்கு தமிழ்நாடு மின் வாரிய வழங்கல் விதியின்படி அவருக்கு மின் இணைப்பு வழங்கவில்லை. திரு. மூர்த்தி UDS பதிவு செய்த ஆவணம், நகல் மற்றும் புரோமோட்டர் கட்டிடம் ஒப்படைத்தற்கான ஆவணமோ அளிக்கவில்லை. அவர் பெயரில் வரிவிதிப்பு செய்யவில்லை. முடிக்கப்பட்ட சில மாதங்கள் கழித்து மின்சார வாரிய விழிப்புணர்வு குழு ஆய்வு செய்து புகைப்படம் எடுத்து கட்டிடம் கட்டி முடிக்கப்படாமல் விதிமுறைக்கு புறம்பாக மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது என உறுதி செய்து எதிர்மனுதாரர், 2,3,4 மற்றும் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியபடி தலைமை பொறியாளர், வேலூர் மின்பகிர்மான மண்டலம் அவர்கள் விழிப்புணர்வு அறிக்கையை ஆய்வு செய்து விதிமுறைக்கு புறம்பாக உரிமைதாரர் அல்லாதவர்களுக்கு கட்டி முடிக்கப்படாத வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது என உறுதி செய்து எதிர்மனுதாரர் 3க்கு இறுதி தண்டனை அளித்துள்ளார் மற்றும் நான்கு பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது ஏன் ? இதிலிருந்து தவறான நபருக்கு தவறாக மின்இணைப்பு அளிக்கப்பட்டு உள்ளது என்பது உறுதியாகிறது.

6.6 வழக்கறிஞரின் சட்ட கருத்துரு அடிப்படையில் 25.5.2015 அன்று மின்இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் மனு அளிப்பதற்கு முன்பே மின்வாரியத்தால் வழக்கறிஞரின் சட்டகருத்து கேட்காத பட்சத்தில் திரு.மூர்த்தி

என்பவரே அவருக்கு சாதகமாக பெற்று கொடுத்துள்ளார் என்பதனை விழிப்புணர்வு குழு விசாரணையில் அவர் தெரிவித்த கருத்தை பதிவு செய்து உள்ளார்கள். ஆகவே, எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் சட்ட கருத்து பெறப்பட்டது. விண்ணப்பம் 25.5.2015 அன்று பதிவு செய்யப்பட்டது என்பது தவறானது ஆகும். ஆனால், 23.6.2015 தான் வழங்கப்பட்டது ஏன் ? விண்ணப்பம் கொடுத்தும் உடனடியாக மீட்டர் பெறப்பட்டு மின்இணைப்பு வழங்க உள்ளதை அறிந்து அவர் 27.5.2015 அன்று ஆட்சேபம் தெரிவித்தார்.

6.7 1.6.2015 எதிர்மனுதாரர்–4 சட்டபூர்வமாக அவரது ஆவணங்களையும் ஆட்சேபனைகளையும் பரிசீலனை செய்யாமல் மிக சாதாரணமாக அவரது ஆட்சேபம் ஏற்புடையதாக இல்லை என்று தெரிவித்ததோடு மட்டுமில்லாமல் மேற்படி கட்டிடம் அவரது உரிமை என்பதனை வட்டாட்சியரிடம் 7 நாட்களுக்குள் பெற்று தருமாறும் தவறும் பட்சத்தில் மின்வாரிய விதிமுறைகளின்படி மின்இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

6.8 புதிய வீடு உரிமையை நிரூபிக்க விக்கிரைய பத்திரம் (sale deed) தேவை, வட்டாட்சியர் மற்றும் மணியக்காரருடைய சான்றிதழ் சட்டபூர்வமான ஆவணம் அல்ல. சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட விக்ரைய அக்ரிமெண்டு பத்திரத்தை ஏற்புடையது அல்ல, என்று கூறி தவறான நபருக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது.

6.9 சிவபாலா அபார்மெண்ட் A1, C4 குடியிருப்புகளுக்கு திரு.மூர்த்தி உரிமையாளர் என்று கூறுவது அடிப்படை முகாந்தாரம் இல்லை. அவர் UDS பதிவு செய்யவில்லை. அந்த இரு குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படவில்லை. நாளது வரை மேற்படி குடியிருப்புகளுக்கு நகராட்சி வரிவிதிப்பு செய்யவில்லை. மேலும், நகராட்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவு பெற்று வரும்படி உத்தரவிட்டுள்ளது.

6.10 சொத்து உரிமை என்பது சான்றிதழ்கள் மூலம் வருவதில்லை. ஆவணங்கள் மூலம் வருவதாகும். விதிமுறை27(4) சான்றிதழைப்பற்றி குறிப்பிடவில்லை. விதிமுறை 27(8) நீக்கப்பட்டுள்ளது என்பதும் தவறு. அப்பார்மெண்டுக்கு எப்படி மின்இணைப்பு வழங்க

வேண்டும் என்று விதிமுறை நீக்கப்படவில்லை. அமுலில் உள்ளது. அமுலில் உள்ள விதிமுறையை நீக்கிவிட்டார்கள் என்பது முரண்பாடு ஆனது ஆகும்.

**6.11** கட்டிட அனுமதி அவரது பெயரில் வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் முழுவதும் மனுதாரர் சொந்த செலவில் கட்டப்பட்டது விற்பனை செய்யப்படாத குடியிருப்புகள் மனுதாரருக்கே சொந்தமானது என்பதனை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை.

**6.12** திரு.மூர்த்தி அவர்கள் VAO வட்டாட்சியர், அளித்த சான்றிதழே அவர் சொத்தின் உரிமையாளர் என்று கருதும் பட்சத்தில் 23.6.2015 மின்இணைப்பு வழங்கப்பட்ட உடன் அவரது நேரடி ஆட்சேபத்தின் அடிப்படையில் திரு. மூர்த்திக்கு 3 நாட்களுக்குள் A1 மற்றும் C4 பிளாட்டிற்கு அவர் பெயரில் நகராட்சி வரிவிதிப்பு செய்யப்பட்டு வரி செலுத்தி ரசீது சார்பு செய்ய வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் மின்இணைப்பு நிரந்தர துண்டிப்பு செய்யப்படும் என்றும் ஏன் கடிதம் அனுப்பப்பட்டது என்பதனை தெரிவிக்கவில்லை. undertaking ஏன் வாங்கப்பட்டது என்பனை தெளிவுப்படுத்தவில்லை. வீட்டுவரி ரசீது 3 நாட்களுக்குள் அளிக்கவில்லை என்றால் நிரந்தர துண்டிப்பு செய்யப்படும் என்று அறிவித்தவர் அவர் நீதி மன்றத்தின் வழக்கு தாக்கல் செய்யும் வரை வீட்டு வரி ரசீது கெடு தேதிக்குள் கொடுக்காத பட்சத்தில் ஏன் நிரந்தர மின்இணைப்பு துண்டிப்பு செய்யப்படவில்லை என்பதை தெரிவிக்கவில்லை.

**6.13** திரு. மூர்த்தி நீதிமன்றத்தில் பிரதிவாதிகளாக எதிர்மனுதாரர்கள் நான்கு பேரை குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் உரையில் இந்த தாவா உரிமையியல் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டது அல்ல என்பதனை தெரிவிக்கவில்லை. மின்சார வாரியம் சார்பாக ஆஜர்படுத்தப்பட்ட வழக்கறிஞர் மின்வாரிய அனுமதி பெற்று நியமிக்கப்பட்டவர் அல்ல. அவருக்கு கட்டணமும் மின்சார வாரியம் வழங்கவில்லை. நீதிமன்றத்தில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட நால்வரில் எதிர்மனுதாரர் 4வது மட்டுமே வக்காலத்தில் கையெழுத்து போட்டு உள்ளார். இதிலிருந்தே எதிர்மனுதாரர்கள் சட்டவிரோதமாக விதிமுறைக்கு புறம்பாக அளிக்கப்பட்ட மின்இணைப்பை துண்டிப்பு

செய்யாமல் இருக்க வழிகாட்டி ஆலோசனை சொல்லி வாய்ப்பு அளித்துள்ளார். இதற்கு ஆதாரமாக தகவல் அறியும் உரிமைச்சட்டபடி தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

6.14 தாவா சொத்தில் வாதி அமைதியான சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருவதை எந்த விதத்திலும் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை மூலம் தடை செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று தீர்ப்பு கோரப்பட்டுள்ளது எனக் கூறுகிறார். ஏ1, சி4, பிளாட்டுக்கு சொந்தமென்பதில் எந்த வழக்கும் இல்லை. தாவாவும் இல்லை. அந்தக் கட்டிடத்திற்கு அவர் உரிமை கோரி வழக்கு எதுவும் போடவில்லை. கட்டிடத்தின் முழு செலவும் அவருடையதே என்பதால் கட்டிடம் அவருக்கு மட்டுமே சொந்தம் சுவாதீனம் என்றால் சட்டபூர்வமாக சொந்தமாக இருப்பதுதான் சுவாதீனம் ஆகும். மேற்படி ஏ1, சி4 குடியிருப்புகள் திரு. மூர்த்தி அவர்களின் சுவாதீனத்தில் இல்லை. அவர் அந்த குடியிருப்பில் அனுபவித்தும் வரவில்லை. சட்டபூர்வமாக மின்இணைப்பை துண்டிப்பு செய்வதை தடை செய்யவில்லை.

6.15 திரு.மூர்த்தி 26.9.2012 நாளிட்ட பிளாட் விக்கிரைய ஒப்பந்தப்படி UDS பதிவு செய்து கொள்ள முன்வராததால் ஏ1, சி4 பிளாட்கள் திரு. ஆர். ரவிசங்கர், திரு. ஆர். அமிர்தகணேசன் ஆகியோருக்கு முறையே விக்கிரைய அக்கிரிமெண்ட் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தங்களின் பெயரில் மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளதை நிராகரிக்கவுமில்லை. அனுமதிக்கவுமில்லை.

## 7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

7.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.10.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் சார்பில் திரு. சிவகுமார் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.3 திரு. உதயன், செயற்பொறியாளர்/ராணிப்பேட்டை எதிர்மனுதாரர்–3 திரு. D. அசோகன், உதவி செயற்பொறியாளர்/ராணிப்பேட்டை மற்றும் எதிர்மனுதாரர்–4 திரு. தனசேகரன் இளம் பொறியாளர், நகர் பிரிவு, ராணிப்பேட்டை அவர்களும் கலந்துகொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளர் சார்பில் கலந்துகொண்ட திரு. R. சிவகுமார் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள மற்றும் எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு எதிர் உரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 திரு. சிவகுமார் அவர்கள் மின்இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கும் திரு. T. மூர்த்தி அவர்களின் பெயரில் ஏ4 மற்றும் சி1 ஆகிய குடியிருப்புகளின் பிரிக்கப்படாத அடிமனை (UDS) நிலம் பதிவு செய்யப்படவில்லை. அவர் மேற்கண்ட குடியிருப்புகளை விலைக்கு வாங்கியமைக்கான பத்திரபதிவு எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, அவர் அந்த குடியிருப்புகளின் உரிமைதாரர் அல்ல. மேலும் அவர் அங்கு குடியிருக்கவும் இல்லை எனவே, அவர் குடியிருப்போர் என்ற நிலையிலும் மின் இணைப்பு பெறமுடியாது என்று வாதிட்டுள்ளார்.

8.3 மேலும், மேற்கண்ட இரண்டு குடியிருப்புகளும் கட்டிட வேலை முடிந்து யாருக்கும் ஒப்படைப்பு செய்யப்படவில்லை. எனவே, அவைகள் கட்டி வேலை முடியாத குடியிருப்புகள் ஆகும். மின்சார வாரியத்தின் விழிப்புப்பணி குழுவும் மின்இணைப்பு வழங்கப்பட்டது தவறு என்பதால் அதில் சம்பந்தப்பட்டுள்ள அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க விழிப்பு குழு பரிந்துரைத்துள்ளது என்றும் அறிய முடிகிறது என்றும் வாதிட்டுள்ளார். மேலும், ஒழுங்கு நடவடிக்கை 5 நபர்கள் மேல் தொடங்கப்பட்டு உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிகாட்டி மின்இணைப்பு வழங்கப்பட்டது தவறு என்று உறுதிபடுத்தப்பட்டதால்தான் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8.4 விண்ணப்பதாரரே விண்ணப்பம் அளிப்பதற்கு முன்பாக சட்ட ஆலோசனை பெற்று சமர்ப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் அவருக்கு சாதகமாக பெற்றுள்ள சட்டகருத்தின் பெயரில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது தவறும் என்றும் வாதிட்டுள்ளார்.

8.5 வழக்கு எண்.54/2015ல் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரராக சேர்க்கப்படவில்லை என்றும் மேற்கண்ட வழக்கில் இந்த வழக்கு உரிமையியல் நீதிமன்றத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்று எதிர்மனுதாரரர்கள் தெரிவிக்கவில்லை. மேலும், மின்சார வாரியம் சார்பாக வழக்காடிய வழக்கறிஞர் மின்சார வாரிய அனுமதி பெற்று நியமிக்கப்பட்டவர் அல்ல என்றும் அவருக்கு fees வாரியம் வழங்கவில்லை என்றும் வாதிட்டு எதிர்மனுதாரர்களால் மேற்கண்ட வழக்கில் சரியாக வாதிடவில்லை என்றும் தெரிவித்தார்.

8.6 மேற்கண்ட இடத்திற்கு அவரிடம்தான் power of attorney உள்ளது என்றும் அதை cancel செய்தது தவறு என்றும் பதிவு துறைக்கு மனு செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8.7 மேலும், அந்த குடியிருப்பு வளாகத்திலுள்ள பொது மின்இணைப்பு அவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி அவர்தான் உரிமையாளர் என்று வாதிட்டார்.

8.8 மேற்கண்ட வளாகத்தில் ஏனைய குடியிருப்புகளுக்கு மாநகராட்சியின் வீட்டு வரி ரசீது பெற்றுக் கொண்டுதான் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு மாறாக திரு. மூர்த்தி அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் பெற்று மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிகாட்டி வாதிட்டார்.

8.9 மேலும், நீதிமன்றத்தில் அவருடைய சுவாதீனத்தில் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாது என்றுதான் ஆணை பெறப்பட்டுள்ளது. திரு. மூர்த்தியின் சுவாதீனத்தில் A1,C4 என்ற குடியிருப்புகள் இல்லை. அவர் அந்த குடியிருப்புகளில் வசிக்கவும் இல்லை. சட்டபூர்வமாக மின்இணைப்பை துண்டிப்பதற்கு தடை விதிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

9. **<u>எதிர்மனுதாரரின் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>**

**9.1** திரு. உதயன் செயற்பொறியாளர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**9.2** திரு. டி. மூர்த்தி அவர்களின் பெயரில் குடியிருப்பு A1 மற்றும் C4 ஆகியவைகளுக்கு அவர் உரிமையாளர் என்ற முறையில் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக வாதிட்டுள்ளார்.

**9.3** மேலும், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அவர் உரிமைச்சான்று சமர்ப்பித்துள்ளதால் அவரின் ஆவணம் ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளின்படிதான் உள்ளது கொடுக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். ஆணையத்தின் உத்தரவுபடி வருவாய்துறை அதிகாரிகளின் சான்றும் ஒப்புக் கொள்ளப்படும் ஆவணம் தான் என்றும் வாதிட்டார். மேலும், அவர் குடியிருப்போர் என்ற முறையில் மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

**9.3** மேலும், மேல்முறையீட்டாளரிடம் அவரின் உரிமை சம்பந்தமான ஆவணங்கள் அளிக்கும்படி கோரப்பட்டது என்றும் ஆனால் அவர் உரிமை சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

**9.4** மேற்கண்ட மின்இணைப்பு உள்ள குடியிருப்பில் அசல் வழக்கு எண்.**54/2015**க்கு **30.3.2016** அன்று அளித்த தீர்ப்புரையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால் அந்த மின்இணைப்பை துண்டிக்க முடியாது என்றும் வாதிட்டார்.

10. **<u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

10.1 மேல்முறையீட்டாளர் சிவபாலா அபார்மெண்ட் A1 மற்றும் C4 என்ற குடியிருப்புகளில் திரு. டி. மூர்த்தி பெயரில் வழங்கப்பட்டுள்ள மின்இணைப்பை துண்டித்து அவர் பெயரில் மின்இணைப்புகள் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**10.2** எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பு உள்ள குடியிருப்பில் அசல் வழக்கு எண்.**54/2015**ற்கு அளித்த தீர்ப்புரையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதால் அந்த மின்இணைப்பை துண்டிக்க முடியாது என்று வாதிட்டார்.

**10.3** மேற்கண்ட குடியிருப்பில் திரு. டி. மூர்த்தி அவர்களின் சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் குறுக்கீடு செய்து இடையூறு செய்யக்கூடாது என்று மாவட்டம் உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் வாதிடுவதால் அந்த வழக்கு எண்.54/2015ன் 30.3.2016 நாளிட்ட ஆணையின் குறிப்பிடப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"3. வழக்குரை, எதிர் வழக்குரை பரிசீலிக்கப்பட்டும் மற்றும் இருதரப்பும் கேட்கப்பட்டும் இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள்–,*

*<u>எழுவினாக்கள்</u>*

*1. வாதி தாவாவில் கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதி உடையவரா ?*

*2. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் யாது ?*

*எழுவினா–1*

*வாதி தனக்கு பாகப்பிரிவினை 27.12.2004 படி குடும்ப சொத்துக்களில் 'D' அட்டவனை சொத்து பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பதிவு செய்யப்பட்ட பத்திரம் அ.சா.ஆ.1ன் படி சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்துள்ளது ரகுபதி என்பவருடன் விற்பனை மற்றும் கட்டுமான ஒப்பந்தம் ஒன்றை 6.9.2012 வா.சா.ஆ2 ஏற்படுத்தி கொண்டு மற்றும் 6.9.2012 தேதியிட்ட கட்டுமான ஒப்பந்தம் வா.சா.ஆ.3ன் படி முதல் தளத்தில் A1 மற்றும் 3வது தளத்தில் C4 அடுக்குமாடி குடியிருப்புகளை பெற்றதாகவும் பின்னர் அத்தகைய குடியிருப்புகள் பிரதிவாதிகளிடமிருந்து இரண்டு மின்சார இணைப்பு பெற்றுள்ளார். A1 பிளாட்டுக்கு உண்டான மின்இணைப்பு அட்டை வா.சா.ஆ4, C4க்கு உண்டான மின்இணைப்பு அட்டை வா.சா.ஆ5, வைப்பீட்டு ரசீதுகள் வா.சா.ஆ6 மற்றும் வா.சா.ஆ7 மின் உபயோகத்திற்கான ரசீது வா.சா.ஆ8 மற்றும் ஆ9.*

*4. பிரதிவாதி தரப்பில் ரகுபதி என்பவருடைய புகார் மற்றும் மனு அடிப்படையில் வாதியிடம் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதன் பேரில் வாதியின் பதில் அறிவிப்பு பிரதிவாதிகளின் சட்ட வல்லுனர்களிடமிருந்து சட்ட கருத்து பெற்று வாதிக்கு இரண்டு மின்சார இணைப்புகள் வழங்கியுள்ளனர். பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ10, வாதியின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ11, பிரதிவாதி தரப்பில் ஆவணங்களின் அடிப்படையில் சட்ட கருத்துரையின் அடிப்படையிலும் வாதிக்கு மின்இணைப்பு பிரதிவாதியால் அளிக்கப்பட்டுள்ளதாலும் மின்சார கட்டணத்தை வாதி செலுத்தி வருவதால் மின்இணைப்பு துண்டிக்கப்படுவது என்ற கேள்வியே எழவில்லை என்றும் வாதி அவசரப்பட்டு தாவாவை தொடர்ந்துள்ளார் என்றும் தாவாவிற்கு*

வழக்கெழு மூலம் இல்லையென்றும் எனவே இந்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என வாதம் எழுப்பப்பட்டது.

5. வா.சா.ஆ10 பிரதிவாதி அலுவலகத்திலிருந்து வாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு அத்தகைய அறிவிப்பில் இரு வீடுகளுக்குரிய வீட்டுவரி ரசீதுகளை இக்கடிதம் கண்ட மூன்று தினங்களுக்குள் வழங்குமாறும் "தவறும் பட்சத்தில் தங்கள் உரிமையை இழக்க நேரிடும் எனவும் தமிழ்நாடு மின்சாரக்கழக நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என கண்டுள்ளது". பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் உரையில் வாதிக்கு மின்சார இணைப்பு அளிப்பதற்கு முன்பே வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்களிடமிருந்து சட்ட கருத்துரை பெற்றதின் அடிப்படையிலும் இரண்டு மின்சார இணைப்பு SC No.2460/C மற்றும் 2461/C வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் சாட்சியத்தில் வாதிக்கு மின்சார இணைப்பு கொடுக்கக்கூடாது என்று வாதி மின்இணைப்பு பெறும் சமயத்திலே கட்டுமான builder ரகுபதி மற்றும் அவரது சகோதரர்கள் புகார் அனுப்பியிருந்துள்ளார்கள் என்று சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி ஏற்கெனவே கட்டுமான ஒப்பந்தகாரர் ரகுபதி மற்றும் அவரது சகோதரர் பல்வேறு புகார் மற்றும் மனுக்களை பிரதிவாதியிடம் அளித்து மின்இணைப்பு அளிப்பதற்கு முன்பே வாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து சட்ட கருத்துரை பெற்று மின்இணைப்பு வழங்கியுள்ள நிலையில் வா.சா.ஆ 10 பிரதிவாதியால் அனுப்பிய அறிவிப்பில் தங்கள் உரிமையை இழக்க நேரிடும் என்பது வாதியின் மின்சார இணைப்பை பிரதிவாதி துண்டித்துவிட அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு வழக்கெழு மூலம் உள்ளது என தீர்மானம் செய்கின்றேன். வாதிக்கு தாவா சொத்தில் உரிமை மூலம் உள்ளது என்பதற்கு சட்டப்படியான ஆவணங்களை சமர்ப்பித்து மின்சார இணைப்பை பெற்று மின் வைப்பீடு செய்து தவறாமல் மின்சார கட்டணம் செலுத்திவரும் நிலையில் வா.சா.ஆ10 பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பில் வாதியின் மின்சார இணைப்பை துண்டித்துவிட அச்சுறுத்துவதாக அமைந்து காணப்படுகிறது என்று தீர்மானித்து வாதி தாவாவில் கோரிய பரிகாரம் பெற அருகதை உடையவர் என இந்த எழுவினாவிற்கு வாதிக்கு சார்பாக விடை காண்கின்றேன்.

6. எழுவினா 2

மேற்கண்ட எழுவினா 1, வாதிக்கு ஆதரவாக தீர்மானித்துள்ளதால் இதர பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வெழுவினாவுக்கு விடைகாணப்படுகிறது.

*7. முடிவாக வாதிக்கு தாவாவில் கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்திரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.*

10.4 மேலும், அசல் வழக்கு எண்.54/2015ல் கீழ்கண்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

*1. பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ முகவர்களோ தாவா சொத்தில் வாதி அமைதியான சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருவதை எவ்விதத்திலும் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்ததுக்கட்டளை மூலம் தடைச் செய்யப்படுகிறார்கள்.*

*2. வழக்கு செலவுத்தொகை குறித்து உத்திரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை (வாதி அவரது செலவுத்தொகை ரூ.906.00) ஐ அவரே ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. பிரதிவாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.''*

10.5 மேற்கண்ட தீர்வின்படி, எதிர்மனுதாரர்களான தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பிரதிநிதி செயற்பொறியாளர், ராணிப்பேட்டையும், இளம்பொறியாளர்/ நகரம்–1, ராணிப்பேட்டை அவர்களும் மேற்கண்ட A1, C4 என்ற குடியிருப்புகளில் திரு. டி. மூர்த்தி அவர்களின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதை எந்த விதத்திலும் குறுக்கீட்டு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை உள்ளது என்று தெரிகிறது. மேலும், தீர்ப்புரையின்படி வழக்கு மின்இணைப்பை துண்டிப்பது சம்பந்தமானது என்பதும், அதற்குதான் நிரந்தர உறுத்துக்கட்டளை இடப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகிறது.

10.6 மேற்கண்ட நிலையில் நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ)ஐ ஆராய விரும்புகிறேன்.

*"அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரர், குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.''*

**10.7** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மின்குறைதீர்ப்பாளரின் முன் சமர்ப்பிக்கப்பட்ட புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையிலிருந்தோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் உடைய நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க முடியாது என்று தெரிகிறது.

**10.8** மாவட்ட நீதிமன்றம் இராணிப்பேட்டை அசல் வழக்கு எண்.54/2015ற்கான தீர்வில் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியுள்ளதால் இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான A1, C4 குடியிருப்பில் வழங்கப்பட்டுள்ள திரு. டி. மூர்த்தி என்பவரின் பெயரில் உள்ள மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்து அவரின் பெயரில் மின்இணைப்பை வழங்க வேண்டும் என்பது ஏற்கெனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட நுதல்பொருள் சம்பந்தமான முறையீடு என்பதால் மன்ற விதி 17(4)(ஈ)ன் படி மேற்கண்ட கோரிக்கையில் தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.9** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 54 / 2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. R. ரகுபதி,
உரிமையாளர்,
சிவபாலா கன்ஸ்டிரக்ஸன்,
13A/9, முதல் தெரு,
எம். எப். ரோடு, இராணிப்பேட்டை 632 401.

2) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர், வேலூர் – 6.

3) செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை– 632 401.

4) உதவி செயற்பொறியாளர்/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை– 632 401.

5) உதவி பொறியாளர்/நகரம்–1/இராணிப்பேட்டை,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13/2, சாமிநாயுடு தெரு, பழைய ஆற்காடு சாலை,
இராணிப்பேட்டை–632 401.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.